**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு டிசம்பர் மாதம் 01–ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1–ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படிதிரு.G.அசோக்பிரசாத் B.A.B.L., M.S.E.N., ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

(1ம் வாதி ஆஜர் . 2 முதல் 4 வாதிகள் ஆஜர் இல்லை.20 மற்றும் 26 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.634/2020

வா.சா.1 சந்தரசேகரன் த/பெ குருசாமி

20ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:–

1. தாவா சொத்து புஞ்சை ஏக்கர் 1.59 1/8 விஸ்தீரணம் கொண்ட பூமியானது வா.சா.3 ஆவணத்தினமான கிரைய ஆவணம் 16.08.1948 படி என் தாத்தாக இலச்சியப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டதா என்றால் சரிதான். வா.சா.7 பாகப்பிரிவினை பத்திரத்தின்படி மேற் சொன்ன தாவா சொத்து புஞ்சை ஏக்கர் 1.59 1/8 விஸ்தீரணம் கொண்ட பூமியானது என் தகப்பனார் குருசாமி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

2. என் தகப்பனார் 08.09.2006 அன்று தாவா சொத்துக்களை பொறுத்து எவ்வித ஏற்பாடும் செய்யாமல் வாதியும், 19,20 மற்றும் 26 ஆகிய பிரதிவாதிகளை வாரிசுகளாக விட்டு விட்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்தில் வாதியாகிய எனக்கும், 19,20 மற்றும் 26 ஆகிய பிரதிவாதிகளுக்கும் 1/4 பங்கு உள்ளது என்றால் சரிதான்.

3. 26ம் பிரதிவாதியான அருணாதேவி என்பவர் வா.சா.11 ஆவணமான விடுதலை பத்திரம் 1ம் வாதியாகி எனக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.34 ஆவணமான உயில் ஆவணத்தை 19ம் பிரதிவாதி 1ம் வாதியாகிய எனக்கு எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். 19ம் பிரதிவாதி தன்னுடைய ஆயில் காலத்திற்கு பிறகு அவருடைய 1/4 பங்கை அவரது ஆயில் காலத்திற்கு பிறகு வாதி அனுபவித்து கொள்ளலாம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 17.01.2024 அன்று என் தாயார் இந்த வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்டார் என்றால் சரிதான்.

4. மேற்படி உயில் சாசனம் படி என் தாயார் பங்கு எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 20ம் பிரதிவாதி தனக்கு வர வேண்டிய பங்குக்காக

நீதிமன்றத்தில் நீதிமன்ற கட்டணம் செலுத்தி எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் எனக்கு தெரியும்.

5. தாவா சொத்து புஞ்சை ஏக்கர் 1.59 1/8 விஸ்தீரணம் கொண்ட பூமியானது வா.சா.6 கிரைய சாசனத்தின் படி வேலன் என்கிற வேலுசாமிக்கு பொதுவில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். வேலன் என்கிற வேலுசாமியின் வாரிசுகள் தான் 2 முதல் 4 வாதிகள் என்றால் சரிதான்.
26ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறிவிட்டார்.
மறுவிசாரணை:– இல்லை